தலைமைக் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், சிவகங்கை.

MCop. 28/2023

RW.1

*****

2024 ஆண்டு டிசம்பர் திங்கள் 05-ம் நாள் மனுதாரர்/எதிர்மனுதாரர் என்பவரின் சாட்சியான வாக்குமூலம் 1956 ஆண்டு 10 வது விதியின்படி திரு. குணசேகரன், Grade II Bench Clerk (தலைமை எழுத்தர்) என்பவரால் ஆணையிடப்பட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | செந்தில்குமார் | தந்தை பெயர் | : | வெள்ளையன் |
| கிராமம் | : | சிவகங்கை | தாலுகா | : | சிவகங்கை |
| ஜாதி | : | | மதம் | : | இந்து |
| தொழில் | : | மருத்துவர் | வயது | : | 39/2024 |

---

**கேள்வி**: இந்நீதிமன்றத்தால் அனுப்பபட்ட சம்மன் பெற்றுக்கொண்ட பின்பு இந்நீதிமன்றத்திற்கு வராமல் இருந்ததற்கான காரணம் என்ன?

**பதில்**: எனது உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் நான் வர இயலாமல் போய்விட்டது.

**பதில் ஏற்கப்பட்டு முதல் விசாரணை செய்யலாம் என உறுதி செய்யப்படுகிறது.**

**முதல் விசாரணை**

**<u>05.12.2024</u>**

நான் சிவகங்கை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சட்டம் சார்ந்த மருத்துவதுறையில் பொறுப்பு தலைமை பேராசியராக பணியாற்றி வருகிறேன். நீதிமன்றத்தில் இருந்து எங்கள் மருத்துவமனைக்கு வந்த அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். கடந்த 12.10.2015 ம் தேதியில் மேற்கண்ட துறையில் மேற்கண்ட பணியில் இருந்தபோது சிவகங்கை நகர் காவல்நிலைய குற்ற

எண்.713/2015 கீழ் 304 ஏ பிரிவின் படி இறந்த அன்பழகன் என்பவருக்கு பிரேத பரிசோதனை செய்யவேண்டி அதே காவல்நிலைய காவல் ஆய்வாளர் அவர்களிடமிருந்தது பிரேத பரிசோதனை வேண்டுகோள் கடிதத்தின்படி அதே காவல்நிலைய தலைமைக் காவலர் குறிஞ்சி குமரன் எண் 1655 என்பவரால் இறந்தவரை அடையாளம் காட்ட எனது பிரேத பரிசோதனையை ஆரம்பித்தேன். எனது பிரேத பரிசோதனை அறிக்கையில் இறந்தவரின் வெளிப்புற உடலில் இறப்பிக்கு முன்பு ஏறப்பட்ட 9 காயங்களின் தன்மைகள் அனைத்தும் சாதாரண காயங்களாக கருதுகிறேன் என்றால் சரிதான். எனது பிரேத பரிசோதனை இறுதி அறிக்கையில் இறந்த அன்பழகன் என்பவர் இருதயத்தில் ஏற்பட்ட அழுத்தத்தின் காரணமாக இரத்த அழுத்தம் குறைந்ததால் மாரடைப்பு ஏற்பட்டதாக கருதுகிறேன் என்று கூறியுள்ளேன். இறப்பிற்கான காரணம் இயற்கை மரணம்.

**மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

இறந்த அன்பழகன் என்பவர் மோட்டார் வாகன விபத்தினால் ஏற்பட்ட காயத்திற்காக எங்கள் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார் என்றால் விசாரணை அதிகாரியின் அறிக்கையில் இறந்த நபர் மோட்டார் வாகன விபத்தில் இறந்திருக்கலாம் எனவும் பிரிவு 304 ஏ இதச கீழ் பதிவு செய்யப்பட்டிருந்தால் மோட்டார் வாகன விபத்தில் ஏற்பட்டதாக நான் உறுதி செய்கிறேன். இறந்த அன்பழகன் என்பவர் எங்கள் மருத்துவமனையில் 29.09.2015 முதல் 12.10.2015 வரை உள்நோயாளியாக சிவகங்கை அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்துள்ளார் என்றால் வழக்கின் சுருக்கத்தில் இது குறிப்பிட்டு இருக்கும் பட்சத்தில் மருத்துவம் பார்த்த மருத்துவர் தான் இது பற்றி சாட்சியம் அளிக்க இயலும்.

இறந்து போன அன்பழகனும் அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனையில் விபத்தில் காயம்பட்டு 15 நாட்கள் உள்நோயாளியாக இல்லாமல் இருந்திருந்தால் அவர் இறப்பதற்கான வாய்ப்பில்லை என்றால் ஒரு மனிதர் காயம்பட்ட நிலைமையில் மருத்துவமனையில் சேர்க்கும்பொழுது அவருக்கு அனைத்து பரிசோதனைகளும் செய்திருக்க வேண்டும் அவ்வாறு செய்திருக்கும் பட்சத்தில் அவருக்கு இதய நோய்கள் உள்ளதா என்பது மருத்துவம் பார்த்த மருத்துவருக்கு தான் தெரியும். அவருக்கு உடல் கூறாய்வு செய்யும் போது இறந்வரின் கல்லீரல் மற்றும் சிறுநீரகம் , கணையம் மற்றும் அனைத்து உறுப்புகளும் சீராக காணப்பட்டது, நுரையீரல் பாதிப்படைந்து அதில் சளி மற்றும் ரத்தம் கலந்த திரவமாக வெளியேற்றப்படுகிறது. மூச்சுக்குழாய் பகுதியில் காற்று மற்றும் நீர் கலந்ததால் வெள்ளை நிற திரவியம் காணப்பட்டது. எலும்புகளை கூறாய்வு செய்தததில் வலது பக்ககாலில் இரு எலும்புகள் முறிந்து அதற்கு நெய்லிங் என்ற ஒருவகையான அறுவை சிகிச்சை செய்ததற்கான தடயங்கள் காணப்பட்டது. இறந்துபோன அன்பழகன் என்பவர் 15 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சை பெறாமல் இருந்திருந்தால் நுரையீரலில் மேற்சொன்ன பாதிப்புகள் ஏற்பட வாய்ப்பில்லை என்றால் சரியல்ல அவர் சேரும் தருவாயில் இறந்தவருக்கு நுரையீரலில் பாதிப்பு இல்லை என்று மருத்துவம் பார்த்த மருத்துவர் கூறும் பட்சத்தில் தான் இது சம்மந்தமாக நான் பதில் கூற முடியும். வலது காலில் எலும்பு முறிவு ஏற்பட்டிருந்தால் அது கொடுங்காயம் ஆகும் என்றால் சரிதான். (Grevious injury) மோட்டார் வாகன விபத்தினால் ஏற்பட்ட காரணத்தினால் இறப்பு நேர்ந்திருக்கலாம் என்றால் மோட்டார்வாகன விபத்தினால் ஏற்பட்ட காயத்தினால் இரண்டாவது தன்மையினால் இறப்பு ஏற்பட வாய்ப்புள்ளது.

**மறு விசாரணை:**

மோட்டார்வாகன விபத்தினால் ஏற்பட்ட காயத்தினால் இரண்டாவது தன்மையினால் இறப்பு ஏற்பட வாய்ப்புள்ளது என்ற விபரத்தினை என்னுடை அறிக்கையில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

A PASUMPON SHANMUGAIAH

Digitally signed by A PASUMPON SHANMUGAIAH
Date: 2024.12.05 11:25:16 +0000

Chief Judicial Magistrate,

Sivagangai.